குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் – 1, ஒசூர்

முன்னிலை திரு.ஆர்.நரசிம்ம மூர்த்தி எல்எல்.பி.,

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17–ம் நாள் செவ்வாய்க்கிழமை

**ஆண்டு பட்டிகை வழக்கு எண்: 25/2026**

**CNR No. TNKI06-000149-2026**

| | |
|---|---|
| குற்றமுறையீடுபவர் | காவல் ஆய்வாளர், சூளகிரி காவல் நிலையம், ஒசூர்.<br>குற்ற எண். 417/2025 |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | அருண்குமார் (37)<br>த/பெ. ரவி |
| குற்றப்பிரிவுகள் | பாரதிய நீதிச் சட்டம் 106 (1) மற்றும் 281 –ன் கீழ் |
| குற்றம் வனையப்பட்டது | பாரதிய நீதிச் சட்டம் 106 (1) மற்றும் 281 –ன் கீழ் |
| **வழக்கின் சுருக்கம்** | |
| எதிரி காவலுக்கு உட்படுத்தப்பட்ட நாட்கள் | 03.11.2025 |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 19.01.2026 |
| BNSS பிரிவுகள் 263, 269, 275 ன் பிரகாரம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 16.02.2026 |
| பல்வகை மனு அதன் முடிவு | -- |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை நாள் | 1. அ.சா.1 மு.வி. 05.03.2026<br>கு.வி. 05.03.2026 |

| | |
|---|---|
| | 2. அ.சா.2 மு.வி. 05.03.2026<br>கு.வி. 05.03.2026<br>3. அ.சா.3 மு.வி. 05.03.2026<br>கு.வி. 05.03.2026<br>4. அ.சா.4 மு.வி. 05.03.2026<br>கு.வி. 05.03.2026<br>5. அ.சா.5 மு.வி.10.03.2026<br>கு.வி.10.03.2026 |
| BNSS பிரிவு 351(1)(b)ன் கீழ் எதிரியை விசாரித்த நாள் | **12.03.2026** |
| தலைமறைவான எதிரியின் விபரம்.மற்றும் ஆஜர் செய்யப்பட்ட விபரம், | – |
| மேல்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை மற்றும் அதன் முடிவு விபரம் | – |
| தீர்மானம் மற்றும் முடிவு | 1. முடிவில் திரண்ட பயனிலிருந்தும் எதிரி பாரதிய நீதிச் சட்டம் 106 (1) மற்றும் 281 –ன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து மேற்கண்ட குற்றங்களிலிருந்து எதிரியை பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச்சட்டம் பிரிவு 271 (1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

| | |
|---|---|
| | எதிரியின் பிணைபத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்துச் செய்ய உத்திரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, வழக்கு சொத்து குறித்து எவ்வித உத்தரவும் இல்லை. |

இந்த வழக்கானது கடந்த 12.03.2026–ம் தேதியன்று விசாரணைக்கு வந்தபொழுது அரசுதரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் திரு.V.கனிமொழி அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.அருள்குமார் அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## <u>தீ ர் ப் பு ரை</u>

**1)** கடந்த 03.10.2025 ம் தேதி காலை எதிரி அருண்குமார் தனது தாயாரான இவ்வழக்கு விபத்தில் இறந்த ஞானசுந்தரி என்பவரை தனது உறவினர் மனோன்மணிக்கு சொந்தமான TN 70 AU 8148 என்ற பதிவு

எண் கொண்ட Hero Pleasure இருசக்கர வாகனத்தில் உட்காரவைத்துக்கொண்டு ஒசூருரிலுள்ள சந்திர சூடேஸ்வரர் மலைக்கோவிலுக்கு சென்றுவிட்டு திரும்ப சூளகிரிக்கு வரவேண்டி 13.20 மணிக்கு ஒசூர் to சூளகிரி தேசிய நெடுஞ்சாலையில் கோபச்சந்திரம் வன அலுவலகம் அருகே இருசக்கர வாகனத்தை அதிவேகமாக ஓட்டிவந்து இருசக்கரவாகனத்தின் பின் சக்கரத்தில் கல் பட்டு திடீரென வெடித்ததில் எதிரி அருண்குமார் மற்றும் ஞானசுந்தரியும் நிலைதடுமாறி கீழே விழுந்ததில் இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து சென்ற ஞானசுந்தரிக்கு பின் தலையில் உள்காயம் ஏற்பட்டதால் சம்பவ இடத்திலேயே இறப்பை ஏற்படுத்தியதாக எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281 மற்றும் 106(1) BNS ன் கீழ் சூளகிரி காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2)** எதிரிக்கு, இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பிறகு வழக்காவணங்களின் நகல்கள் யாவும் BNSS 230 பிரிவின்படி இலவசமாக வழங்கப்பட்டன.

3) இரு தரப்பும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்ட பின்னர், இந்நீதிமன்றத்தால் BNSS 263 (1) பிரிவின்படி, எதிரிக்கு எதிராக பாரதிய நீதிச் சட்டம் 106 (1) மற்றும் 281 –

ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு BNSS 263 (2) பிரிவின் கீழ் மேற்படி குற்றச்சாட்டுகள் குறித்து விளக்கி வினவியபோது எதிரி தான் குற்றவாளி இல்லை என்று மறுத்துக் கூறினார். எனவே, எதிரிக்கு எதிரான அரசுத் தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4) இந்த வழக்கில் அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் வழக்கில் நிகழ்நிலைப்புகார்தாரரும், இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன ஞானசுந்தரியின் மகனுமாகிய திரு.கிருஷ்ணகுமார் என்பவர் அ.சா.1 ஆகவும், பிரேத விசாரணை சாட்சியான ஓம்பிரகாஷ் அ.சா.2 ஆகவும், பார்வை மகஜர் சாட்சிகளான ராமப்பா மற்றும் சக்தி ஆகியோர் முறையே அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகவும், மேலும் இவ்வழக்கின் புலன் விசாரனை அதிகாரிக்காக சூளகிரி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் திரு.மோகனசுந்தரம் என்பவர் அ.சா.5 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர். இவ்வழக்கில் சாட்சிப்பட்டியலில் கண்ட 3, 6, 7 முதல் 11 வரையிலான நபர்களை விசாரிப்பதிலிருந்து விலக்களிக்க அரசு தரப்பில் கோரியிருந்ததில் அனுமதி வழங்கப்பட்டு மேற்படி சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை.

5) மேலும் அரசு தரப்பில் புகார் மனுவில் உள்ள அ.சா.1ன் கையெழுத்து அ.சா.ஆ.1 ஆகவும், பார்வை மகஜரில் உள்ள அ.சா.3ன்

கையெழுத்து அ.சா.ஆ.2 ஆகவும், பார்வை மகஜரில் உள்ள அ.சா.4ன் கையெழுத்து அ.சா.ஆ.3 ஆகவும், புகார் மனு அ.சா.ஆ.4 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆகவும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆகவும், பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.9 ஆகவும், பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.10 ஆகவும், மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6) இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான சங்கதிகள் குறித்து, BNSS 351 (1) (b)ன் படி வினவியபோது, எதிரி பொய் சாட்சியம் என அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை மறுத்தார். மேலும் எதிரி தரப்பில் விசாரணை செய்ய சாட்சி யாருமில்லை என்று கூறியதால், எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. மேலும் எதிரி தரப்பில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

7) இரு தரப்பு வாதங்கள் கூர்ந்து கேட்கப்பட்டன. சாட்சிய சான்றாவணங்கள் கவனமாக பரிசிலீக்கப்பட்டன.

8) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள், இரு தரப்பு வாதுரைகள் ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய ஆய்வுக்குரிய பிரச்சனை யாதெனில், எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

9) **<u>பிரச்சனைக்கான தீர்வு:</u>**

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கில் நிகழ்நிலைப்புகார்தாரரும், இவ்வழக்கு விபத்தில் இறந்த ஞானசுந்தரின் மகனுமாகிய அ.சா.1, பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ்சாட்சியம் அளித்துள்ளபோதும், பிரேத விசாரணை சாட்சியான அ.சா.2 மற்றும் புலன் விசாரணை அதிகாரிக்காக சாட்சியமளித்துள்ள அ.சா.5 ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கை ஆதரித்து எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யும் வகையில் சாட்சியமளித்துள்ளார்கள் என்றும், மேலும் அவர்களுடைய வாய்மோழி சாட்சியங்களை அரசு தரப்பு சான்றாவணங்களான அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 ஆகியவை ஒத்திசைந்து அமைந்துள்ளது என்றும், அந்த வகையில் வழக்கு விபத்து எதிரியின் அதிவேக மற்றும் அஜாக்கிரதையான செயலால் ஏற்பட்டு

அவருடைய தாயார் ஞானசுந்தரி என்பவருக்கு மரணத்தை ஏற்படுத்தியது என்பதை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரி பாரதிய நீதிச் சட்டம் 106 (1) மற்றும் 281 –ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து  எதிரிக்கு தக்க தண்டனை வழங்கி தீர்ப்பளிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

10) எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கில் புகார் மனுவிலும், முதல் தகவல் அறிக்கையிலும் எதிரி ஓட்டிசென்ற இரு சக்கர வாகனத்தை பின்புற டயரில் கல்அடித்ததில் டயர் வெடித்ததால் விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், எனவே வழக்கு விபத்திற்கு எதிரி காரணம் இல்லை என்றும், இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரும், பிரேதவிசாரனை சாட்சியும், பார்வை மகஜர் சாட்சிகளுமான அ.சா.1 முதல் அ.சா.4 ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக பிறழ்சாட்சி அளித்துள்ளார்கள் என்றும், இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளாக யாரும் முன்னிலைப்படுத்தாத நிலையில் எதிரி இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவோ, அஜாக்கிரதையாகவோ ஓட்டி வந்தார் என்பது நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எனவே இவ்வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே சாட்சியமளித்துள்ள காவல் உதவி ஆய்வாளர் அ.சா.5ன் சாட்சியம் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்ய போதுமானது

அல்ல என்றும், மேலும் அ.சா.5ம் தனது குறுக்கு விசாரணையின்போது எதிரி ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தின் பின்புற டயர் வெடித்ததால்தான் விபத்து ஏற்பட்டது என ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், எனவே இவ்வழக்கு விபத்தின்போது எதிரி இரு சக்கர வாகனத்தை அதிவேகமாகவோ மற்றும் அஜாக்கிரதையாகவோ ஓட்டி வந்தார் என்பதை அரசு தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லையென்றும், இவ்வழக்கில் முறையான விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக பொய்யான இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரியை குற்றவாளி அல்ல தீர்மாணித்து எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்று கூறி வாதிட்டார்.

11) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கின்படி, கடந்த 03.10.2025 ம் தேதி காலை எதிரி அருண்குமார் தனது தாயாரான இவ்வழக்கு விபத்தில் இறந்த ஞானசுந்தரி என்பவரை தனது உறவினர் மனோன்மணிக்கு சொந்தமான TN 70 AU 8148 என்ற பதிவெண் கொண்ட Hero Pleasure இருசக்கர வாகனத்தில் உட்காரவைத்துக்கொண்டு ஒசூரிலுள்ள சந்திர சூடேஸ்வரர் மலைக்கோவிலுக்கு சென்றுவிட்டு திரும்ப சூளகிரிக்கு வரவேண்டி 13.20 மணிக்கு ஒசூர் to சூளகிரி தேசிய

நெடுஞ்சாலையில் கோபச்சந்திரம் வன அலுவலகம் அருகே இருசக்கர வாகனத்தை அதிவேகமாக ஓட்டிவந்து இருசக்கரவாகனத்தின் பின்சக்கரத்தில் கல் பட்டு திடீரென டயர் வெடித்ததில் எதிரி அருண்குமார் மற்றும் ஞானசுந்தரியும் நிலைதடுமாறி கீழே விழுந்ததில் இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து சென்ற ஞானசுந்தரிக்கு பின் தலையில் உள்காயம் ஏற்பட்டதால் சம்பவ இடத்திலேயே இறப்பை ஏற்படுத்தி எதிரி BNS பிரிவுகள் 281 மற்றும் 106(1) ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்தை புரிந்துள்ளதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

**12)** இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன ஞானசுந்தரி என்பவர் எதிரியின் தாயார் ஆவார். நிகழ்நிலைபுகார்தாரரான அ.சா.1 எதிரியின் உடன்பிறந்த மூத்த சகோதரர் ஆவார். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.சா.ஆ.4 புகார் மனுவிலும் மற்றும் அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கையிலும் உள்ள சங்கதிகளை பரிசீலிக்கையில் விபத்து குறித்து எதிரி தனது அண்ணனான அ.சா.1க்கு போன் மூலமாக அளித்த தகவலின்பேரில் அ.சா.1 சம்பவ இடத்திற்கு வந்து பிறகு புகார் அளித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது புலப்படுகிறது. மேலும் அ.சா.ஆ. 4 புகார் மனுவிலும், அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கையிலும் எதிரி தனது தாயாரான ஞானசுந்தரி என்பவரை TN 70 AU 8148 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் உட்காரவைத்துக்கொண்டு ஓசூரிலிருந்து சூளகிரி

நோக்கி தேசிய நெடுஞ்சாலையில் ஓட்டிக்கொண்டு வந்தபோது இருசக்கர வாகனத்தின் பின்சக்கரம் திடிரென வெடித்ததால்  எதிரியும், அவரது தாயாரும் நிலைதடுமாறி கீழே விழுந்ததில் எதிரியின் தாயாருக்கு பின்தலையில் உள்காயம் ஏற்பட்டு இறந்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது புலப்படுகிறது. மேலும் புகார் மனுவிலும், முதல் தகவல் அறிக்கையிலும் எதிரி இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவோ அஜாக்கரதையாகவோ ஓட்டிவந்ததாக குறிப்பிடவில்லை என்பதும் நன்கு புலப்படுகிறது.

13) ஆனால் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையில் எதிரி இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்தபோது இருசக்கர வாகனத்தின் பின்புற டயரில் கல் அடித்து விபத்து ஏற்பட்டதாக ஏதிரிக்கு எதிராக BNS  பிரிவுகள் 106(1) மற்றும் 281 ன்கீழ் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

14) இருப்பினும் இவ்வழக்கின் நிகழ்நிலைபுகார்தாரரான அ.சா.1, பிரேதவிசாரனை சாட்சியான அ.சா.2 ஆகியோர் நீதிமன்றத்தில் அளித்துள்ள சாட்சியத்தில் எதிரி இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவோ கவனக்குறைவாகவோ ஓட்டிவந்தபோது விபத்து ஏற்பட்டதாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும் இவ்வழக்கில் புலன் விசாரனை அதிகாரியால் கண்ணுற்ற சாட்சிகள் யாரையும்

விசாரணை செய்யப்படவில்லை. எனவே இவ்வழக்கில் எதிரி இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்தார் என்பதை அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

15) மேலும் இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகியோரும் வழக்கை பற்றி எதுவும் தெரியாது என்றும், தாங்கள் காவல் நிலையத்திற்கு சென்றபோது போலிசார் தங்களிடம் கையெழுத்து பெற்றுக்கொண்டதாகவும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள். எனவே இவ்வழக்கில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடமும் நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றும் கருதுகிறது.

16) இந்நிலையில் இவ்வழக்கின் புலன்விசாரனை அதிகாரிக்காக சூளகிரி காவல் நிலைய உதவி ஆய்வாளர் அ.சா.5 ஆக ஆவணங்களின் அடிப்படையில் அரசு தரப்பு வழக்கை ஆதரித்து சாட்சியம் அளித்துள்ளார். இருப்பினும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.சா.ஆ.11 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் இருசக்கர வாகனத்தின் பின்டயரில் கல் அடித்ததால் வெடித்துள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.5 தனது குறுக்கு விசாரனையின்போது எதிரி ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தின்

டயர் வெடித்ததால் விபத்து ஏற்பட்டது என ஒப்புக்கொண்டுள்ளார். எனவே இவ்வழக்கில் எதிரி ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் பின்பிற டயரில் கல்அடித்து டயர் வெடித்ததால் விபத்து ஏற்பட்டது என்பது புலப்படுகிறது. எதிரி இருசக்கர வாகனத்தை விபத்தின்போது அதிவேகமாகவும், அஜாக்கரதையாகவும் ஓட்டிசென்றதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளபோதிலும் அதனை நிரூபிக்கக்கூடிய எந்தவொரு நம்பதகுந்த சாட்சியத்தையும் புலன்விசாரனை அதிகாரியால் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை. எனவே புலன் விசாரனை அதிகாரிக்காக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ள அ.சா.5 உதவி ஆய்வாளரின் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு எதிரியின் மீதான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யப்பட்டதாக தீர்மாணிக்க இயலாது.

17) இவ்வழக்கில் அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள சாட்சிகளும், சான்றாவணங்களும் இவ்வழக்கில் எதிரி மீதான பாரதிய நீதிச் சட்டம் 106 (1) மற்றும் 281 BNS 2023– ன் கீழான குற்றச்சாட்டுக்களை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. ஆகையால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக பாவித்து எதிரி பாரதிய நீதிச் சட்டம் 106 (1) மற்றும் 281 –ன் கீழ் குற்றவாளி அல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

18) முடிவில் திரண்ட பயனிலிருந்தும் எதிரி பாரதிய நீதிச் சட்டம் 106 (1) மற்றும் 281–ன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து மேற்கண்ட குற்றங்களிலிருந்து எதிரியை பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச்சட்டம் பிரிவு 271 (1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரியின் பிணைபத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்துச் செய்ய உத்திரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, வழக்கு சொத்து குறித்து எவ்வித உத்தரவும் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 17–ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NARASIMMA MOORTHI

Digitally signed by NARASIMMA MOORTHI
Date: 2026.03.25 11:34:02 +0530

**பின் அட்டவணை**

**1. குற்ற முறையீட்டாளர் தரப்பு சாட்சிகள் பட்டியல்**

| வ. எண் | சாட்சியின் பெயர் | சாட்சியின் வரிசை |
|---|---|---|
| 1. | கிருஷ்ணகுமார் | அ.சா.1 |
| 2. | ஓம்பிரகாஷ் | அ.சா.2 |

| | | |
|---|---|---|
| 3. | ராமப்பா | அ.சா. 3 |
| 4. | சக்தி | அ.சா. 4 |
| 5. | மோகனசுந்தரம், காவல் உதவி ஆய்வாளர், சூளகிரி காவல் நிலையம். | அ.சா.5 |

**2). குற்ற முறையீட்டாளர் தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்**

| **வ. எண்** | **ஆவண விவரம்** | **சான்றாவண வரிசை** |
|---|---|---|
| 1. | புகார் மனுவில் உள்ள அ.சா.1ன் கையெழுத்து | அ.சா.ஆ.1 |
| 2. | பார்வை மகஜரில் உள்ள அ.சா.3ன் கையெழுத்து | அ.சா.ஆ.2 |
| 3. | பார்வை மகஜரில் உள்ள அ.சா.4ன் கையெழுத்து | அ.சா.ஆ.3 |
| 4. | புகார் மனு | அ.சா.ஆ.4 |
| 5. | முதல் தகவல் அறிக்கை | அ.சா.ஆ.5 |
| 6. | மாதிரி வரைபடம் | அ.சா.ஆ.6 |
| 7. | பார்வை மகஜர் | அ.சா.ஆ.7 |
| 8. | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.ஆ.8 |
| 9. | பிரேத விசாரணை அறிக்கை | அ.சா.ஆ.9 |
| 10. | பிரேத பரிசோதனை அறிக்கை | அ.சா.ஆ.10 |
| 11. | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை | அ.சா.ஆ.11 |

**3). குற்ற முறையீட்டாளர் தரப்பு சான்று பொருட்கள் பட்டியல்**

| வ.எண் | சான்று பொருள் விவரம் | சான்று பொருள் வரிசை |
|---|---|---|
| – | –– | –– |

**4). எதிரி தரப்பு சாட்சிகள் பட்டியல்**

| வ.எண் | சாட்சியின் பெயர் | சாட்சியின் வரிசை |
|---|---|---|
| – | – | – |

**5). எதிரி தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்**

| வ.எண் | தேதி | ஆவண வவரம் | சான்றாவண வரிசை | தன்மை |
|---|---|---|---|---|
| – | – | – | – | – |

NARASIMMA MOORTHI

Digitally signed by NARASIMMA MOORTHI
Date: 2026.03.25 11:33:57 +0530

**நகல்:**

மாண்புமிகு தலைமை குற்றவியல் நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.